## 105. குதிரையின் பலத்தில் விருப்பப்படார்

### பல்லவி

குதிரையின் பலத்தில் விருப்பப்படார்
வீரனின் காலில் பிரியப்படார்
தமக்கு பயந்து தமது கிருபைக்கு
காத்திருப்பவர் மேல் விருப்பமுள்ளார்

### அனுபல்லவி

*எருசலேமே நீ கர்த்தரை துதி*
*சீயோனே உன் தேவனை துதி*

### சரணங்கள்

1. அவர் உன் வாசல்களின்
தாழ்ப்பாளை பலப்படுத்தி
உன்னிடத்தின் உள்ள பிள்ளைகளை
ஆசீர்வதித்து நடத்துவார்
- எருசலேமே

2. அவர் உன் எல்லைகளை
சமாதானமாக்கிடுவார்
உச்சிதமான கோதுமையால்
உன்னை திருப்த்தியாக்கிடுவார்
- எருசலேமே

3. அவர் தம் வார்த்தைகளை
பூமியிலே அனுப்புகிறார்
சாந்த குணம் உள்ளவனை
உயர்த்தி நிறுத்துகிறார்
- எருசலேமே